10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2010/2011 (ஜனவரி 2013)

## EDU/S 3101 மாணவர் பொருத்தப்பாடும் முன்பள்ளிக் கல்வியும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) பொருத்தப்பாடு என்பதன் மூலம் நீர் கருதுவது யாது?

(06 புள்ளிகள்)

(ஆ) வகுப்பறைக் கற்பித்தலில் உளவியல் பொருத்தப்பாட்டின் அவசியத்தை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) மாணவர் பொருத்தப்பாட்டில் ஒரு பாடசாலை எந்தளவு செல்வாக்குச் செலுத்துகின்றதென்பதை உதாரணங்களுடன் விளக்குக?

(10 புள்ளிகள்)

02.(அ) மாணவர்களின் உளரீதியான பொருத்தப்பாடற்ற நிலைமைகளைத் தோற்றுவிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) மனமுறிவினால் பொருத்தப்பாடுடையாதவர்கள் சமநிலை ஆளுமைத் தன்மையை அடைந்து கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய விஷேட நுட்பங்களை உதாரணங்களுடன் ஆராய்க.

(09 புள்ளிகள்)

(இ) தகைப்பு என்றால் என்ன? தகைப்பைத் தோற்றுவிக்கும் காரணிகளைச் சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

03.(அ) ரிம் லோர்மன் (Tim Loreman) கற்றல் இடர்பாடு என்பதற்குக் கூறும் வரைவிலக்கணங்களின் வகைகளைக் குறிப்பிடுவதுடன் அவர் கூறும் கற்றல் இடர்பாடுகளைப் பகுப்பாய்வு செய்க.

(09 புள்ளிகள்)

(ஆ) நெறிபிறழ்வு என்பதில் ஆளுமை, சூழ்நிலை என்பன எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றன என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) எலாம்பிராசோ (Elamperaso) கூறும் பிழையான சீராக்கம் பெறுவதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

04.(அ) இலங்கைப் பாடசாலைகளில் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையின் அவசியத்தை உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) வழிகாட்டல் ஆலோசனைச் சேவையை வழங்குபவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள், அவரின் பணிகள் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்க.

(08 புள்ளிகள்)

(இ) ஒரு வகுப்பறையில் பிறழ்வு நடத்தைக்குள்ளான மாணவர்களுக்கு ஆசிரியர் எவ்வாறான வழிகாட்டல்களை மேற்கொள்வதன் மூலம் அவர்களை நன்னெறிப்படுத்தலாம் என்பதை நடைமுறை உதாரணங்கள் காட்டி ஆராய்க.

(09 புள்ளிகள்)

05.(அ) நெறிபிறழ்வுத்தன்மை எவ்வாறு உண்டாகின்றதென்பதை சிக்மன்ட் புரொய்ட்டின் உளப்பகுப்புக் கொள்கையை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

(09 புள்ளிகள்)

(ஆ) கார்ள் றோஜர்ஸ் (Carl Rogers) முன்வைத்த தனியாள் மையக் கொள்கையில் கூறப்படும் முக்கிய கருத்துக்களை இன்றைய காலகட்டத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

(இ) தொழில் வழிகாட்டல் தொடர்பாக கின்ஸ்பேர்க் (Ginzberg) குறிப்பிடும் கருத்துக்களை சுருக்கமாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

06.(அ) பிரெட்றிச் புரோபல், மார்க்கிரட் மக்மிலன் ஆகியோர் முன்பள்ளிக் கல்வி தொடர்பாகக் கூறிய கருத்துக்களை இன்றைய முன்பள்ளிக் கல்வி முறையுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) இன்றைய முன்பள்ளிப்பருவ மாணவர்களது கற்றலில் பெற்றோரது பங்களிப்புக்களை விமர்சன ரீதியாக ஆராய்க.

(08 புள்ளிகள்)

(இ) இலங்கையில் முன்பள்ளி ஆசிரியர்கள் தொடர்பாகக் காணப்படும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்க.

(07 புள்ளிகள்)

***